கிற காரணத்தால் அங்கே ஜெனரேட்டர்ஸ் வைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா? அதே போல் ஆண் பிரிவில், மென் வார்டில் ஒன்பது படுக்கைகள்தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து போகிற நிலை இருப்பதால் அந்த தாலுக்கா மருத்துவ மனையில் ஆண்களுக்காக ஒன்பது படுக்கை கள் மட்டும் இருப்பது நல்லதுதானா? அதைக் குறைந்தது 50 படுக்கைகளாகவாவது உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இரண்டு வாரங் களுக்கு முன்பாக 28–ம் தேதி டானிடா ப்ராஜக்ட்டுக்கு, அங்கே சென்ற நேரத்தில் அவர்களும் என்னோடு வந்திருந் தார்கள். அந்த மருத்துவ மனையைப் பார்வையிட்டிருக் கிறோம். அங்குள்ள பிரச்சினை எல்லாம் சில கட்டில்கள் சரியாக இல்லை என்பதைக் கூட பார்த்திருக்கிறோம். நான் சென் னைக்கு வந்த பிறகு உடனடியாக

The Cots have to be either repaired or replaced.

என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இவைகளுக்குப் பரிகாரம் செய்ய, இன்னும் அதில் ஏராளமான பற்றாக்குறை இருந்தால் அதைப்பற்றி பிறகு சிந்திக்கலாம்.

அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷனில் தொழிலாளர் நல நிதி ஏற்படுத்துதல்.

*வினா எண் 490—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) அண்ணா என்ஜினீயரிங் கார்ப்பரேஷனில் தொழி லாளர் நல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து செயல்பட்டு வருகிறது?

(இ) அந்த நிதியைக் கொண்டு தொழிலாளர்களுக்கு இதுவரையில் செய்துள்ள நன்மைகள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) 21—3—1979-லிருந்து செயல்பட்டு வருகிறது.

(இ) தொழிலாளர்களின் பள்ளி செல்லும் குழந்தை களுக்கு புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்க 1979–80 ஆம் ஆண்டில் 38 தொழிலாளிக்கு ரூ. 500ல், 1980–81 ஆம் ஆண்டில் 69 தொழிலாளர்களுக்கு ரூ. 2,520–ம் தொழி லாளர் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

1982 மார்ச் 16]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷனில் இருக்கக் கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு மட்டும்தான் இந்த நல உரிமைத் திட்டம் செயல்படுமா அல்லது அண்ணா டிரான்ஸ்போர்ட் முழுவதும், அந்தக் கம்பெனியிலே இருக்கக்கூடிய எல்லாத் தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தற்போது அந்த பொறியியல் கழகத்திலே உள்ளவர்களுக்கு மட்டும் என்றிருக்கிறது. இதை விரிவுபடுத்துவது பற்றி பின்னாலே யோசிக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, பொறியியல் பிரிவுக்கு மட்டும் இதை அமுலாக்குவது என்று சொல்வது, ஒரு சலுகையை அந்த பிரின்ஜ் பெனிபெட்டை தொழிலாளர்களுக்கு கொடுக்கும்போது, அந்தக் கம்பெனியிலே இருக்கக் கூடிய எல்லாத் தொழிலாளர்களுக்கும் அந்த உரிமை, பயன் கிடைக்காமற்போகுமேயானால், தொழிலாளர்கள் மத்தியில் ஒரு சங்கடம், வெறுப்பு உருவாகும். அது வேலைகளை சரிவர நடத்துவதற்கு உகந்ததாக இருக்காது. ஆகவே, அந்த கார்ப்பரேஷன் முழுவதற்கும் அதை நீட்டிப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்? அதோடு என்ன காரணத்தால் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அது விஸ்தரிக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு பிரிவுக்கு மட்டும்தான் என்று நான் தெரிவித்தேன். அந்தக் கழகம் வேறு; அண்ணா போக்குவரத்துக் கழகம் என்பது வேறு. இந்த பொறியியற் கழகம் தனியான ஒரு கழகமாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இருந்தாலும், இதை அண்ணா போக்குவரத்துக் கழகத்திலும் விரிவுபடுத்துவது பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. இதனால், தொழிலாளர்களுக்கு மன சங்கடம் ஏற்படும் என்று சொல்லிவிட முடியாது. அந்தக் கழகத்தின் வேலையும், இந்தக் கழகத்தின் வேலையும் மாறுபட்டது. இங்கே இன்னும் பல சலுகைகள் கொடுக்கப்படுகிறது. எனவே, அதை ஒப்பிட்டுச் செல்ல முடியாது.